# முதன்மை மாவட்ட நீதிமன்றம், சேலம்

## இளநிலை கட்டளைதாரர் பணிக்கான எழுத்துத் தேர்வு

| | | | |
|---|---|---|---|
| பெயர் | | தேதி | 23.05.2018 |
| தகப்பனார் பெயர் | | பிறந்த தேதி | |
| விண்ணப்பம் எண் | | பதவியின் எண் | |
| கால அளவு | 1 மணி 15 நிமிடங்கள் | மதிப்பெண் | 100 |

| | |
|---|---|
| தேர்வு எழுதுபவரின் கையொப்பம் | தேர்வு மேற்பார்வையாளரின் கையொப்பம் |

**கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள நான்கு பதில்களில் நீங்கள் தேர்வு செய்யும் சரியான பதிலுக்கு, ஒவ்வொரு பதிலுக்கும் முன் உள்ள கட்டத்தில் சரி என்பதைக் குறிக்கும் குறியீடான (√) என்று குறிக்கவும்.**

1) 'நீராடும் கடலுடுத்த' எனத் தொடங்கும் தமிழ்தாய் வாழ்த்து இடம் பெற்றுள்ள நூல் எது?

☐ (A) பாரதியின் கவிதைபாட்டு
☐ (B) சிலப்பதிகாரம்
☐ (C) மனோன்மணியம்
☐ (D) புறநானூறு

2) எனது சகோதரியின் மரணத்தைவிடவும், இவரது மரணம் எனக்கு பேரிடியாக இருந்தது என்று காந்தியடிகள் குறிப்பிட்டது யாரை?

☐ (A) விஜயலட்சுமி பண்டிட்
☐ (B) சரோஜினி நாயுடு
☐ (C) தில்லையாடி வள்ளியம்மை
☐ (D) மேடம் க்யூரி

3) கப்பலோட்டிய தமிழன் என்கின்ற நூலை எழுதிய ஆசிரியர் யார்?

- (A) டி.ஆர்.பந்துலு
- (B) சுப்பிரமணியசிவா
- (C) ம.பொ.சிவஞானம்
- (D) ஏ.சி.திருலோகசந்தர்

4) வீரபாண்டிய கட்டபொம்மன் கிஸ்தி கொடுக்க மறுத்து வாதம் செய்த திருநெல்வேலி ஆங்கிலேய ஆட்சியரின் பெயர் யாது?

- (A) வெலிங்டன் துரை
- (B) நிக்சன் துரை
- (C) ஜாக்சன் துரை
- (D) ஆஸ்துரை

5) "ஆரியம் போல் உலகவழக்கழிந் தொழிந்து
சிதையாவுன் சீரிளமைத் திறம்
வியந்து செயல்மறந்து வாழ்த்துதமே"
மேற்கண்ட தொடரில் குறிப்பிடப்படும் மொழிகள் யாது?

- (A) இந்தி - தமிழ்
- (B) சமஸ்கிருதம் - தமிழ்
- (C) சமஸ்கிருதம் - தெலுங்கு
- (D) சமஸ்கிருதம் - மலையாளம்

6) என் கடன் பணி செய்து கிடப்பதே என்று கூறியவர்?

- (A) சுந்தரர்
- (B) மாணிக்கவாசகர்
- (C) திருநாவுக்கரசர்
- (D) திருஞானசம்பந்தர்

7) கல்கியின் எந்த படைப்புக்கு சாகித்திய அகடமி விருது வழங்கப்பட்டது?

- (A) தியாகபூமி
- (B) அலைஓசை
- (C) பொன்னியின் செல்வன்
- (D) சிவகாமியின் சபதம்

8) ஒரு பொருளின் விலை ரூ.1,500/- என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனை தள்ளுபடி விலையில் ரூ.1,350/- க்கு விற்றால் தள்ளுபடி செய்யப்பட்ட சதவீதம் என்ன?

- ☐ (A) 5%
- ☐ (B) 10%
- ☐ (C) 15%
- ☐ (D) 20%

9) ஒரு கிராமத்தின் மக்கள் தொகை 2015-ம் ஆண்டு 18,000. 2017-ஆம் ஆண்டு 5% சதவீதம் உயர்ந்துள்ளது என்றால் 2017-ம் ஆண்டு அந்த கிராமத்தில் மக்கள் தொகை எவ்வளவு?

- ☐ (A) 18,100
- ☐ (B) 18,500
- ☐ (C) 18,900
- ☐ (D) 19,000

10) 30 பைசா என்பது இரண்டு ரூபாயில் எத்தனை சதம்?

- ☐ (A) 30%
- ☐ (B) 20%
- ☐ (C) 20%
- ☐ (D) 15%

11) 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்கின்ற பாட்டு அமைந்துள்ள தமிழ் நூல் எது?

- ☐ (A) அகநானூறு
- ☐ (B) புறநானூறு
- ☐ (C) பத்துபாட்டு
- ☐ (D) எட்டுத்தொகை

12) முதல் உலகத் தமிழ்மாநாடு எங்கே நடைபெற்றது?

- ☐ (A) மதுரை
- ☐ (B) சென்னை
- ☐ (C) மலேசியா
- ☐ (D) இலங்கை

13) வந்தேன், பார்த்தேன், வென்றேன் என்று முழங்கிய மன்னன் யார்?

- ☐ (A) மாவீரன் அலெக்ஸாண்டர்
- ☐ (B) ஜீலியஸ் சீசர்
- ☐ (C) அகஸ்டஸ் சீசர்
- ☐ (D) வின்செண்ட் சர்ச்சில்

14) இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலாக இருந்தவர்?

- ☐ (A) ராஜகோபாலாச்சாரி
- ☐ (B) கேனிங்
- ☐ (C) டல்ஹௌசி
- ☐ (D) லார்ட் மௌண்ட் பேட்டன்

15) பத்து நபர்கள் ஒரு வேலையை ஆறு நாட்களில் முடிக்கின்றனர், 15 நபர்கள் வேலை செய்தால் எத்தனை நாட்களில் அந்த வேலை முடிவுபடும்?

- ☐ (A) 5 நாட்களில்
- ☐ (B) 4 நாட்களில்
- ☐ (C) 3 நாட்களில்
- ☐ (D) 2 நாட்களில்

16) 30 வேலையாட்கள் ஒரு நாளைக்கு 5 மணி நேரம் உழைத்து 32 நாட்களில் 300 மீட்டர் சாலையை அமைக்க முடியும் என்றால், 20 வேலையாட்கள் ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வேலை செய்து 100 மீட்டர் சாலை அமைக்க தேவைப்படும் நாட்கள் எத்தனை?

- ☐ (A) 10 நாட்கள்
- ☐ (B) 15 நாட்கள்
- ☐ (C) 20 நாட்கள்
- ☐ (D) 25 நாட்கள்

17) இந்தியாவில் பூமிதான இயக்கத்தை துவங்கியவர் யார்?

- ☐ (A) இராஜாஜி
- ☐ (B) ஜெயபிரகாக்ஷ் நாராயணன்
- ☐ (C) வினோபாபாவே
- ☐ (D) காந்தி

18) ஒரு ஏக்கர் என்பது கீழ்க்கண்டவற்றுள் எதனை குறிக்கும்?

- ☐ (A) 10 செண்டு
- ☐ (B) 20 செண்டு
- ☐ (C) 50 செண்டு
- ☐ (D) 100 செண்டு

19) இந்திய தேசியகீதம் பாடும் கால நேரம் எவ்வளவு?

- ☐ (A) 60 விநாடிகள்
- ☐ (B) 58 விநாடிகள்
- ☐ (C) 55 விநாடிகள்
- ☐ (D) 52 விநாடிகள்

20) கி.பி. 2018-க்கு இணையன திருவள்ளுவராண்டு எது?

- ☐ (A) 2020
- ☐ (B) 2025
- ☐ (C) 2040
- ☐ (D) 2049

21) சமண மத துறவிகளால் இயற்றப்பட்ட நூல் எது?

- ☐ (A) ஜடகா கதைகள்
- ☐ (B) நாலடியார்
- ☐ (C) மணிமேகலை
- ☐ (D) சீவகசிந்தாமணி

22) அதிக நாட்கள் அதாவது மூன்று ஆண்டுகள் தொடர்ந்து திரையரங்கில் ஓடிய தமிழ் திரைப்படம் எது?

- [ ] (A) ஹரிதாஸ்
- [ ] (B) அரிச்சந்திரன்
- [ ] (C) கர்ணன்
- [ ] (D) ஆயிரத்தில் ஒருவன்

23) வில் அம்பு கொடி யாருடையது?

- [ ] (A) பொதுவுடமை ஆட்சி கொடி
- [ ] (B) சேரர்களின் கொடி
- [ ] (C) சோழர்களின் கொடி
- [ ] (D) மலைவாழ் மக்கள் முன்னேற்றகழக கொடி

24) இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலக மொழிகள் எத்தனை?

- [ ] (A) 22
- [ ] (B) 23
- [ ] (C) 25
- [ ] (D) 27

25) தற்போது வழக்கத்தில் உள்ள கிறிஸ்த்துவர்களின் விவிலியம் எனப்படும் (பைபிளை) தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?

- [ ] (A) கால்டுவெல்
- [ ] (B) ஜி.யூ.போப்
- [ ] (C) ஆறுமுக நாவலர்
- [ ] (D) வீரமாமுனிவர்

26) 'கந்த புராணம்' என்கின்ற தமிழ் காவியத்தை எழுதியவர் யார்?

- [ ] (A) குமரகுருபரர்
- [ ] (B) ஆறுமுக நாவலர்
- [ ] (C) கச்சியப்ப சிவாச்சாரியார்
- [ ] (D) கிருபானந்தவாரியார்

27) அறுபடை வீடுகளில் இடம்பெறாத வீடு?

- [ ] (A) சுவாமிமலை
- [ ] (B) மருதமலை
- [ ] (C) திருப்பரங்குன்றம்
- [ ] (D) திருத்தணி

28) 'முத்தைத் தரு பத்தித் திருநகை' என்கின்ற பாடல் அமைந்த நூல் எது?

- [ ] (A) கந்தபுராணம்
- [ ] (B) திருப்புகழ்
- [ ] (C) கந்தசஷ்டி
- [ ] (D) திருவாசகம்

29) தெலுங்கானா மாநில அரசால் அறிவிக்கப்பட்டுள்ள இரண்டாவது மாநில அலுவல் மொழி எது?

- [ ] (A) தமிழ்
- [ ] (B) உருது
- [ ] (C) இந்தி
- [ ] (D) கன்னடம்

30) 'தமிழுக்குக் கதி' என்று போற்றப்படும் நூல்கள் எது?

- [ ] (A) பாட்டும் தொகையும்
- [ ] (B) சிலம்பும் மேகலையும்
- [ ] (C) இராமாயணமும் குறளும்
- [ ] (D) பாரதமுமம் இராமாயணமும்

31) பெத்தலகேம் குறவஞ்சி நூல் ஆசிரியர் யார்?

- [ ] (A) வேதநாயக சாஸ்திரிகள்
- [ ] (B) வீரமாமுனிவர்
- [ ] (C) ஜான் **ஹெ** ன்றி
- [ ] (D) கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

32) குளுக்கோஸ் கிளைகோஜனாக மாற்றப்பட்டு சேமித்து வைக்கும் இடம் எது?

- ☐ (A) கல்லீரல் மட்டும்
- ☐ (B) கல்லீரல் மற்றும் தசைகளில்
- ☐ (C) தசைகளில் மட்டும்
- ☐ (D) கணையத்தில்

33 இரத்த புற்றுநோய் என்பது:

- ☐ (A) லூக்கிமியா
- ☐ (B) த்ரோம்போசிஸ்
- ☐ (C) ஹீமோபிலா
- ☐ (D) ஹீமோலைசிஸ்

34) அவசரகால ஹார்மோன் என அழைக்கப்படுவது எது?

- ☐ (A) அட்ரீனலின்
- ☐ (B) கார்டிசோன்
- ☐ (C) ஆல்டோஸ்டீரோன்
- ☐ (D) ஈஸ்ட்ரோஜன்

35) நாஞ்சில்நாடு என்று அழைக்கப்பட்ட மாவட்டம் எது?

- ☐ (A) செங்கல்பட்டு
- ☐ (B) திண்டுக்கல்
- ☐ (C) கடலூர்
- ☐ (D) கன்னியாக்குமரி

36) ஆறு மாதத்திற்கு மேலாக புழக்கத்திலுள்ள காசோலை கீழ்கண்டவாறு அழைக்கப்படும்.

- ☐ (A) சாதாரண காசோலை
- ☐ (B) பின்தேதியிட்ட காசோலை
- ☐ (C) சிறப்பு காசோலை
- ☐ (D) காலக்கெடு முடிந்த காசோலை

37) கிறித்துவ திருமண சட்டம் 1925 படி நடைபெற்ற திருமணத்தை, திருமண முறிவு பெறுவதற்கு எந்த சட்டத்தின்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட வேண்டும்?

- (A) சிறப்பு திருமண சட்டம் 1954 (**Special Marriage Act** 1954 )
- (B) கிறித்துவ திருமண சட்டம் 1925 (**Christian Marriage Act** 1925 )
- (C) கிறித்துவ திருச்சபை சட்டம் (**Canon Law**)
- (D) திருமண முறிவு சட்டம் 1890 (**Divorce Act** 1890)

38) இந்திய சமூக சேவகர்கள் என்ற அமைப்பை ஏற்படுத்தியவர்?

- (A) கோபால கிருக்ஷ்ண கோகலே
- (B) பாலகங்காதர திலகர்
- (C) மகாத்மா காந்தி
- (D) அன்னிபெசண்ட் அம்மையார்

39) ஒரு சக்கரமானது 3 விநாடிகளில் 48 சுற்றுகள் சுற்றுகிறது, அதே போல் சக்கரம் 30 விநாடிகளில் எத்தனை முறை சுற்றும்.

- (A) 400
- (B) 420
- (C) 440
- (D) 480

40) வானம் நீல நிறத்தில் தோன்ற காரணம்

- (A) ஒளி குறுக்கீட்டு விளைவு
- (B) ஒளிசிதறல்
- (C) ஒளி விளிம்பு விளைவு
- (D) ஒளி தளவிளைவு

41) வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டவர்?

- (A) நாராயண குருக்கள்
- (B) அச்சுதானந்தம்
- (C) ஈ.வெ.இராமசாமி
- (D) இராஜகோபாலாச்சாரி

42) A, B -ஐ விட இரண்டு மடங்கு வேலை செய்கிறார். B- ஆல் ஒரு வேலையை தனியாக முடிக்க 12 நாட்கள் ஆனால் A மற்றும் B இருவரும் சேர்ந்து அந்த வேலையை முடிக்க தேவைப்படும் நாட்கள் எத்தனை?

- ☐ (A) 4 நாட்கள்
- ☐ (B) 6 நாட்கள்
- ☐ (C) 8 நாட்கள்
- ☐ (D) 18 நாட்கள்

43) இராமு 12 கி.மீ வடக்காக நடந்து பின்னர் 10 கி.மீ கிழக்காகவும் மற்றும் 12 கி.மீ தெற்காகவும் நடந்தால் அவன் தொடக்கத்திலிருந்து இப்பொழுது இருக்கும் இடம் எவ்வளவு தூரம்.

- ☐ (A) 9 கி.மீ
- ☐ (B) 13 கி.மீ
- ☐ (C) 8 கி.மீ
- ☐ (D) 10 கி.மீ

44) அருள் என்பவர் ரூ.4,000/- ஒரு வங்கியில் 3 ஆண்டுகளுக்கு வருடத்திற்கு 15% வட்டியில் முதலீடு செய்தால், அப்பணத்திற்கு 3 ஆண்டுக்கு பிறகு கூட்டு வட்டி எவ்வளவு கிடைக்கும்?

- ☐ (A) ரூ.1083.50
- ☐ (B) ரூ.2083.50
- ☐ (C) ரூ.2183.50
- ☐ (D) ரூ.2483.50

45) இராமயணத்தில் ராமன் மற்றும் இராவணன் படைகளிடையே எவ்வளவு காலம் போர் நடைபெற்றது?

- ☐ (A) ஓராண்டு
- ☐ (B) ஆறுமாதம்
- ☐ (C) 18 நாட்கள்
- ☐ (D) 13 நாட்கள்

46) சிங்க முகமும், மனித உடலும் கொண்டது நரசிம்மர் அவதாரம். அதேபோன்று எகிப்தில் மனித முகமும், சிங்க உடலும் கொண்ட சிற்பத்தின் பெயர் என்ன?

- (A) ஸ்பின்ஸ் (Sphinx)
- (B) பீனிக்ஸ் (Phoenix)
- (C) டிமிட்டர் (Demeter)
- (D) டியோன்சஸ் (Dionysus)

47) இராமனை நாயகனாக கொண்டு எழுதப்பட்ட இராமாயணத்திற்கு எதிராக இராவணனை நாயகனாக கொண்டு எழுதப்பட்ட நாடக நூல் எது?

- (A) இராவண காவியம்
- (B) கீமாயணம்
- (C) இராவண சரிதம்
- (D) எதிர் இராமாயணம்

48) குரங்கணி மலை எந்த மலை தொடரில் அமைந்துள்ளது?

- (A) கிழக்கு தொடர்ச்சி மலை பகுதி
- (B) மேற்கு தொடர்ச்சி மலை பகுதி
- (C) சேர்வராயன் மலை
- (D) கொல்லிமலை

49) இந்திய அரசின் அறிவிப்புபடி இந்தியாவில் கடைசியாக மின்வசதி பெற்ற லீசாங் கிராமம் எந்த மாநிலத்தில் உள்ளது?

- (A) அருணாசல பிரதேசம்
- (B) மணிப்பூர் மாநிலம்
- (C) சிக்கிம்
- (D) ஜார்கண்ட்

50) சித்திரை திருவிழாவின் போது கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் போது அணிவிக்கப்படும் உடை எது?

- (A) தூய வெண்பட்டு
- (B) செம்மையான செந்நிறப்பட்டு
- (C) பூக்களினால் அலங்கரிக்கப்பட்ட பூ சொறிந்த மாலைகள்
- (D) பச்சைப்பட்டு

51) புல்லாங்குழலில் எத்தனை துளைகள் உள்ளன?

- (A) 7
- (B) 8
- (C) 9
- (D) 10

52) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம் அமைந்துள்ள மாவட்டம் எது?

- (A) தூத்துக்குடி
- (B) மதுரை
- (C) விருதுநகர்
- (D) திருநெல்வேலி

53) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோருக்கான ஓய்வு பெறும் வயது?

- (A) இருவரின் ஓய்வு பெறும் வயதும் ஒன்றே
- (B) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியின் ஓய்வு பெறும் வயது, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஓய்வு பெறும் வயதை விட இரண்டு ஆண்டுகள் கூடுதல்
- (C) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியின் ஓய்வு பெறும் வயது, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஓய்வு பெறும் வயதை விட மூன்று ஆண்டுகள் கூடுதல்
- (D) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியின் ஓய்வு பெறும் வயது, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஓய்வு பெறும் வயதை விட ஐந்து ஆண்டுகள் கூடுதல்

54) பாகிஸ்தான் நாட்டின் தலைநகர் எது?

- (A) லாகூர்
- (B) கராச்சி
- (C) இஸ்லாமாபாத்
- (D) டாக்கா

55) 24 மீட்டர் நீளமுள்ள ஒரு ரிப்பன் பயன்பாட்டிற்காக 3 : 2 : 7 என்கின்ற விகிதத்தில் மூன்று துண்டுகளாக வெட்டப்படுகின்றது எனில் ஒவ்வொரு துண்டின் நீளம் என்ன?

- ☐ (A) 3 : 4 : 14
- ☐ (B) 8 : 4 : 12
- ☐ (C) 8 : 6 : 10
- ☐ (D) 6 : 4 : 14

56) நான்கு சிட்டுகுருவிகள் சேர்ந்து ஒரு கூட்டை நான்கு நாட்களில் கட்டி முடித்தது. ஒரு சிட்டுக்குருவியை போல் இரண்டு மடங்கு திறன் கொண்ட இரண்டு ஆந்தைகள் அதே கூட்டினை கட்டி முடிக்க ஆகும் காலம் எவ்வளவு?

- ☐ (A) ஆறு நாட்களில்
- ☐ (B) மூன்று நாட்களில்
- ☐ (C) இரண்டு நாட்களில்
- ☐ (D) ஆந்தைகள் தங்களது கூட்டினை கட்டுவது கிடையாது

57) சதுரவடிவப் பூங்காவின் பக்க அளவுகள் 60 மீட்டர், அதன் தரையை சமன் செய்ய சதுர மீட்டருக்கு ரூ.5/- வீதம் ஆகும் செலவு எவ்வளவு?

- ☐ (A) ரூ.3,000/-
- ☐ (B) ரூ.1,800/-
- ☐ (C) ரூ.7,500/-
- ☐ (D) ரூ.18,000/-

58) ஒரு தோட்டமானது முக்கோண வடிவில் உள்ளது, அதன் அடிப்பக்கம் 26 மீ, உயரம் 28 மீ, தோட்டத்தை சமன் செய்ய சதுர மீட்டருக்கு ரூ.5/- வீதம் ஆகும் மொத்த செலவு என்ன?

- ☐ (A) ரூ.3,640/-
- ☐ (B) ரூ.1,820/-
- ☐ (C) ரூ.1,400/-
- ☐ (D) ரூ.1,500/-

59) போரின் போது சேர நாட்டு போர் வீரர்கள் அணிந்த பூமாலை?

- ☐ (A) வேப்பம்பூமாலை
- ☐ (B) அத்திமாலை
- ☐ (C) மாம்பூ மாலை
- ☐ (D) பனம்பூமாலை

60) பண்டைய தமிழகத்தில் கடலும், கடற்கரைப் பகுதியும் எவ்வாறு அழைக்கப்பட்டது?

- ☐ (A) குறிஞ்சி
- ☐ (B) முல்லை
- ☐ (C) பாலை
- ☐ (D) நெய்தல்

61) வள்ளலாரின் அருட்பா இயக்கத்திற்கு எதிராக 'மருட்பா' இயக்கம் யாரால் ஆரம்பிக்கப்பட்டது?

- ☐ (A) சதாவாதனம் செய்குத்தம்
- ☐ (B) சபாபதிபிள்ளை
- ☐ (C) ஆறுமுக நாவலர்
- ☐ (D) மகாவித்வான் சபாபதி நாவலர்

62) முகமதுபின் துக்ளக் இந்திய நாட்டின் தலைநகரை தில்லியிலிருந்து எந்த நகருக்கு மாற்றி உத்தரவிட்டார்?

- ☐ (A) கல்கத்தாவிற்கு
- ☐ (B) தேவகிரிக்கு
- ☐ (C) இராஜபுதினம்
- ☐ (D) வங்காளத்திற்கு

63) ஐந்தாண்டு திட்டத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு?

- ☐ (A) முந்தைய சோவியத் ரஷ்யா
- ☐ (B) இங்கிலாந்து
- ☐ (C) பிரான்சு
- ☐ (D) அமெரிக்கா

64) தான் இயற்றிய ராமாயணத்திற்கு கம்பர் இட்ட பெயர்?

- ☐ (A) இராமாவதாரம்
- ☐ (B) இராமகாவியம்
- ☐ (C) இரணியன் வதைபடலம்
- ☐ (D) இராமசரிதம்

65) ஃபார்வட் பிளாக் (**Forward Block**) கட்சியை உருவாக்கியவர் யார்?

- ☐ (A) எம்.என்.ராய்
- ☐ (B) ஜோஷி
- ☐ (C) ஜே.பி.கிருபாளினி
- ☐ (D) சுபாஷ் சந்திரபோஸ்

66) 4% ஆண்டு வட்டி வீதப்படி 2 ஆண்டுகளில் ரூ.1,632/- கூட்டு வட்டி தரும் என்றால் அசலை கண்டறிக.

- ☐ (A) ரூ.10,000/-
- ☐ (B) ரூ.20,000/-
- ☐ (C) ரூ.30,000/-
- ☐ (D) ரூ.40,000/-

67) வாக்கிங் போகும் போது மொபைல் யூஸ் பண்ண வேண்டாம் - சரியான தமிழ் மொழி பெயர்க்கப்பட்ட வாக்கியம் எது?

- ☐ (A) நடைபயிற்சி செய்யும்போது செல்போனை பயன்படுத்த வேண்டாம்
- ☐ (B) நடைபயிற்சி போகும்போது தொலைபேசியை பயன்படுத்த வேண்டாம்
- ☐ (C) நடைபயிற்சியின்போது பேச வேண்டாம்
- ☐ (D) நடைபயிற்சி போகும்போது அலைபேசியை பயன்படுத்த வேண்டாம்

68) கீழகண்ட வார்த்தைகளை அர்த்தமுள்ள வரிசையில் எழுதுக.
( தேன், பூ, வண்டு, மெழுகு)

- ☐ (A) தேன், வண்டு, மெழுகு, பூ
- ☐ (B) பூ, தேன், வண்டு, மெழுகு
- ☐ (C) பூ, வண்டு, தேன், மெழுகு
- ☐ (D) மெழுகு, வண்டு, பூ, தேன்

69) மணிப்பூர் மாநில உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ள தமிழக நீதிபதி யார்?

- ☐ (A) R.சுதாகர்
- ☐ (B) V.இராமசுப்பிரமணியன்
- ☐ (C) N.பால்வசந்தகுமார்
- ☐ (D) N.கிருபாகரன்

70) A என்பவர் ஒரு திசையை நோக்கி 1 கி.மீ நடந்து சென்று, பிறகு இடது பக்கம் திரும்பி ½ கி.மீ நடந்து செல்கிறார், பின்னர் மீண்டும் இடது பக்கம் திரும்பி நடந்து செல்கிறார், தற்போது அவர் கிழக்கு திசையை நோக்கி நடந்து செல்கிறார், எனில் அவர் தொடக்கத்தில் எந்த திசையை நோக்கி நடக்கத் தொடங்கினார்?

- ☐ (A) மேற்கு
- ☐ (B) கிழக்கு
- ☐ (C) வடக்கு
- ☐ (D) தெற்கு

71) ஒரு கடிகாரத்தின் மணி கண்ணாடியில் பார்க்கும்போது 3-15 அவ்வாறெனில் கடிகாரத்தில் நேரடியாக காணப்படும் சரியான மணி எது?

- ☐ (A) 8 - 45
- ☐ (B) 9 - 15
- ☐ (C) 8 -15
- ☐ (D) 9 - 45

72) கடிகாரம் 3-40 மணியை காட்டும்போது மணி முள்ளுக்கும், நிமிட முள்ளுக்கும் இடையேயுள்ள கோணம்?

- ☐ (A) 120 டிகிரி
- ☐ (B) 130 டிகிரி
- ☐ (C) 140 டிகிரி
- ☐ (D) 150 டிகிரி

73) மணிக்கு 8 கி.மீ வேகத்தில் ஓடும் முயலை மணிக்கு 10 கி.மீ வேகத்தில் ஓடும் நாய் 100 மீட்டர் இடைவெளியில் துரத்தி செல்லும்போது, நாய் எவ்வளவு நேரத்தில் முயலை பிடிக்க கூடும்?

- ☐ (A) 3 நிமிடங்களில்
- ☐ (B) 5 நிமிடங்களில்
- ☐ (C) 10 நிமிடங்களில்
- ☐ (D) 15 நிமிடங்களில்

74) கோவா மாநிலம் இந்திய குடியரசில் இணைக்கப்பட்ட ஆண்டு?

- ☐ (A) 1960
- ☐ (B) 1962
- ☐ (C) 1965
- ☐ (D) 1967

75) ஆகாய விமானங்களின் வேகத்தை அளக்கும் கருவியின் பெயர்?

- ☐ (A) ஸ்பீடா மீட்டர்
- ☐ (B) வால்டா மீட்டர்
- ☐ (C) டேக்கோ மீட்டர்
- ☐ (D) ஆல்டி மீட்டர்

76) மனித உடலில் எத்தனை சதவீதம் நீர் உள்ளது?

- ☐ (A) 30 %
- ☐ (B) 50%
- ☐ (C) 70%
- ☐ (D) 80%

77) உலகம் உருண்டை என்பதை முதலில் நிரூபித்த தத்துவஞானி யார்?

- (A) அரிஸ்டாட்டில்
- (B) பிளாட்டோ
- (C) கலிலியோ
- (D) நியூட்டன்

78) இரண்டாம் உலக போருக்கு பின்னர் கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி என்று பிரிந்து இருந்த ஜெர்மன் எப்போது ஒன்றிணைந்தது?

- (A) 1985
- (B) 1990
- (C) 1995
- (D) 2000

79) ஒரு பைசா தமிழன் என்கின்ற பத்திரிக்கையினை துவக்கி நடத்தியவர் யார்?

- (A) சி.பா. ஆதித்தனார்
- (B) அயோத்திதாச பண்டிதர்
- (C) பாலசுப்ரமணியன்
- (D) சா.விஸ்வநாதன்

80) முத்தமிழ் வித்தகர் என்றழைக்கப்படுபவர் யார்?

- (A) சுவாமி விபுலானந்தர்
- (B) சுவாமி கிருபானந்த வாரியார்
- (C) சுவாமி குன்றகுடி அடிகளார்
- (D) மதுரை ஆதீன அருணகிரி சுவாமிகள்

**Find out the most similar meaning (Synonyms) for underlined words in the given below questions:**

81) The Laws and Rules are made to be <u>enforced.</u>

- ☐ (A) Important
- ☐ (B) imposed
- ☐ (C) neglected
- ☐ (D) diverted

82) He was <u>perplexed.</u>

- ☐ (A) puzzled
- ☐ (B) doubted
- ☐ (C) disbelieved
- ☐ (D) startled

**Find out the most opposite (Antonyms) for the underlined words in the given below questions:**

83) Time is <u>precious.</u>

- ☐ (A) valid
- ☐ (B) invalid
- ☐ (C) costly
- ☐ (D) important

84) She had to <u>secure</u> a job.

- ☐ (A) get
- ☐ (B) manage
- ☐ (C) lose
- ☐ (D) attain

**Find out correct prefix to the word given below:**

85) nutrition.

- ☐ (A) mal
- ☐ (B) dis
- ☐ (C) re
- ☐ (D) pre

86) regular

- ☐ (A) un
- ☐ (B) ir
- ☐ (C) dis
- ☐ (D) sub

**Find out the correct suffix to the word given below:**

87) equal

- ☐ (A) ity
- ☐ (B) al
- ☐ (C) ible
- ☐ (D) ive

88) survive

- ☐ (A) ity
- ☐ (B) ly
- ☐ (C) ful
- ☐ (D) al

**Fill in the blanks with suitable Articles given in the brackets.**

**( a, an, the)**

89) Italy is __________European country.

90) The thief was sent to __________ prison.

91) India will become __________super power shortly.

**Fill in the blanks with suitable preposition given below:**

92) Don't point __________________my mistakes.

- ☐ (A) in
- ☐ (B) at
- ☐ (C) out
- ☐ (D) for

93) I am looking _________________ a good job.

- ☐ (A) for
- ☐ (B) at
- ☐ (C) in
- ☐ (D) of

**Find out the correct plural form to the word given belos:**

94) child

- ☐ (A) Childs
- ☐ (B) Childrens
- ☐ (C) Children
- ☐ (D) Chils

95) monkey

- ☐ (A) monkeys
- ☐ (B) monkies
- ☐ (C) monkieses
- ☐ (D) more monkey

**கீழ்கண்ட 96 முதல் 100 வரையான வினாக்களில் உள்ள ஆங்கில எழுத்துக்களுக்கு விரிவாக்கம் தருக.**

96) NLC

97) BSNL

98) CBSE

99) TNPL

100) TNPSC

-------------

செயல்முறைதாள் (Working Sheet):